Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

வருகையின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 68 கர்த்தாவே, எதுவரைக்கும் என்னை மறந்திருப்பீர், எதுவரைக்கும் உம்முடைய முகத்தை எனக்கு மறைப்பீர்? சங்.13:1 ஏப்ரல் 2022 No.4

சிலுவையும் ஜெபமும்

The cross and prayer

F.J.Huegel

கிறிஸ்துவோடு சிலுவையிலறையப்படுதல் என்ற கண்ணோட்டத்தில் ஜெபத்தைக் குறித்து சிந்திப்போம். தேவனோடுள்ள உறவின்றி ஜெபம் வெறும் பூஜ்யமே. பழைய வாழ்வு தேவனோடு ஐக்கியம் கொள்ள முடியாது. ஏனெனில் கிறிஸ்துவில் அது குற்றஞ்சாட்டப்பட்டு மரணத்துக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டாயிற்று. பழைய வாழ்வு முடிவுக்கு வந்தால் மட்டுமே உண்மையான தேவ உறவு கூடுமாகிறது.

பழைய மனிதனுடைய பலத்தோடு மனிதன் இந்த ஜெப மண்டலத்துக்குள் பிரவேசிக்க முயற்சிப்பதால் ஜெபத்தை திருப்தியற்றதாகவும், ஜெப வாழ்வை கவர்ச்சியற்றதாகவும் காண்கிறான். பழைய மனிதன் மாம்சத்துக்குரியவைகளல்லாத வல்லமையான தேவ ஆயுதங்களைத் தரிக்கவில்லை. அவன் சத்துருக்களை சினேகிக்கவோ, எப்பொழுதும் மகிழ்ச்சியாயிருக்கவோ, கிறிஸ்துவின் சிந்தையோடிருக்கவோ கூடாது. எந்த ஒரு கிறிஸ்தவ கிருபையும் அவனிடத்திலிருக்க முடியாது. பழைய மனிதன் நடித்துக் கொண்டிருக்கலாம். ஆனால் அவைகளை சொந்தமாக்கிக் கொள்ள முடியாது.

அவை பரத்திலிருந்து வரும் ஆவியின் கனிகள். ஒரு விசுவாசிக்கு அளிக்கப்படக்கூடிய கிறிஸ்துவின் தன்மையின் புறச்செயல். அது சிலுவையின் அடிப்படையில் அவனுக்குள் கலந்துவிடுகிறது. ஏனெனில் பழைய மனிதனின் தன்மை கிறிஸ்துவின் மரணத்தில் பங்குகொள்வதால் அகற்றப்பட்டு விடுகிறது.

உண்மையான ஜெபம் நம்மில் உருவாக நாம் கிறிஸ்துவுடனே சிலுவையில் அறையப்பட வேண்டும். இதுவே முதன்மையானதும், முக்கியமானதுமான நிபந்தனை. "நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால் நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்" யோவா.15:7. கிறிஸ்துவுக்குள் நாம் முழுமையாக நிலைத்திருக்க பழைய மனிதன் சாகவேண்டும். அது இரட்சகரின் மரணத்தின் வல்லமை. தேவன் நம்மைக் கிறிஸ்துவோடு அறையப்பட்டவர்களாகக் காண வேண்டும்.

நாம் கிறிஸ்துவோடு மரணத்திலும் உயிர்த்தெழுதலிலும் ஒன்றிணைக்கப்பட்டிருப்பதை உணரும் போது மட்டுமே ஜெபம் ஒரு மிகப்பெரிய விசை எனக் காண இயலும். இந்த அனுபவம் அப்போஸ்தலர் நடபடிகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அனேக பக்தர்களின் அனுபவத்திலும் காலாகாலமாக இதை நாம் காண்கிறோம்.

நமது ஆவி, மாம்சத்திலிருந்து சிலுவையின் வல்லமையால் விடுவிக்கப்படும்போது, நாம் கழுகுகளைப் போல செட்டைகளை அடித்து எழும்புவோம். அப்போது வணக்கத்துக்குரியவரும் நித்தியமானவருமான ஆண்டவர் முற்றிலுமாக நம்மிலிருந்து வெளிப்படுவார். இடைவிடாமல் ஜெபிக்கும் அனுபவம் கல்வாரியின் வெற்றியால் சாதகமாகும். நாம் கிறிஸ்துவுடன் பரலோகில் வாழுவோம் என்ற அனுபவத்திற்குள்ளாகிறோம்.

இப்போது ஜெபம் ஜீவனுள்ள தேவனுடைய ஆவியால் வல்லமைப்படுத்தப்பட்டு சுயநலம் முற்றிலும் அழிக்கப்படுகிறது. வாக்குக்கடங்காத பெருமூச்சுகள் வெளிப்படுகின்றன. எனவே மலைகள் பெயர்க்கப்படவும், கூடாதவைகள் கூடுமானவைகளாகவும் மாறும். ஜெபம் தேவசித்தத்தை செயல்படுத்துவதால் எந்தக் கடினங்களையும் மேற்கொள்ளுவதாகவும், எந்தப் பிரச்சனையையும் தீர்வு செய்வதாகவும், எந்த பெரிய தேவையையும் பூர்த்தி செய்வதாகவும் அமையும்.

அப்போதுதான் ஆண்டவர் ஜெபத்தால் எதையும் சாதிக்க முடியும் என்று கூறியதற்கும், இன்று ஜெபத்தைக் குறித்து மக்களின் நடைமுறைக்கும் உள்ள வேறுபாடு உணரப்பட்டு, ஜெபம் அதன் உண்மையான தன்மையுடன் முழு மகிமையோடு மலரும்.

மிகப்பெரிய ஜெப வீரர்கள்

ஹட்சன் டெயிலரும் அவரோடு சில துணை ஊழியர்களும் சீனாவுக்கு ஆயிரம் பணியாட்கள் அனுப்பப்பட வேண்டும் என்று ஜெபித்தனர். **ஆண்டவர் பதினொன்றாயிரத்து ஐம்பத்து நான்கு பணியாட்களைக் கொடுத்தார்.**

பிரிஸ்டலில் வாழ்ந்த ஜார்ஜ் முல்லர் ஜெபத்திற்குப் பதிலாக ஆயிரக்கணக்கான உதவியற்ற சிறுவர்களுக்குத் தேவையான திரளான பொருளுதவியினைப் பெற்றார்.

டேவிட் பிரெய்னார்டு புதிய இங்கிலாந்தின் காடுகளுக்குள் தேவனோடு போராடினார். அவர் தாம் நேசித்த இந்தியர்களின் எழுப்புதலுக்காக மட்டுமல்ல உலகமுழுவதிலும் ஆத்துமாக்கள் சந்திக்கப்பட ஜெபித்தார். மிஷனெறி இயக்க வரலாற்றாசிரியர்கள் தற்கால மிஷனெறி யுகத்தில் நாம்நுழைய அவரே முக்கிய காரணமாயிருந்தார் என்று ஒப்புக் கொள்கின்றனர்.

இத்தகைய சாதனைகளை அதிகமாக நிகழ்த்தியவர்கள் ஆண்டவராகிய இயேசுவையும், அவரது உயிர்த்தெழுதலின் வல்லமையையும் அறிந்தவர்களாவர். அப்போஸ்தலனாகிய பவுலைப் போல அவரது பாடுகளில் அவர்கள் பங்கு கொண்டனர். "இப்படி நான் அவரையும் அவரது உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி ....." பிலி.3:10.

கிறிஸ்துவின் மரணத்திலும் வெற்றியிலும் பங்கு

உலகம் பொருளாதாரத்திலும், சன்மார்க்க நெறியிலும் நெருக்கடிகளை சந்திக்கக் காரணம் சபையின் ஆவிக்குரிய பெலவீனம்தான். தேசங்கள் மீட்படைய சபைதான் தெய்வீக வழிகாட்டியாயிருக்கிறது.

இன்றும் என்றும் தேவையின் அழுகுரல், மனித உள்ளங்களிலிருந்து சுயநலம் அகற்றப்பட வேண்டும் என்பதற்காகவும், கிறிஸ்துவின் மிகப்பெரிய அன்பு, தேசங்களில் பிரளயமாக பாய்ந்து ஓடவேண்டும் என்பதற்காகவுமே. வேறு விதமாக தேசத்திற்கு க்ஷேமமில்லை. தனிநபர்களின் ஆத்துமாக்களுக்கும் வேறு நம்பிக்கையில்லை.

(3-ம் பக்கம் பார்க்க)

அறிவிப்புகள்

1. வருகையின் தூதன் ஊழியத்தை உற்சாகமாய் தாங்கியும், குறிப்பாக வங்கி வழியாக காணிக்கை அனுப்பியும் பத்திரிகை வரத் தவறினால் தயவாய் தெரிவியுங்கள்.
2. ரசீது, நன்றி ஜெப கடிதம் இன்னமும் வராவிட்டால் தயவாய் தெரிவியுங்கள்.
3. சிறப்பு காணிக்கை அனுப்பிய அனைவருக்கும் ஒரு ஞாபகார்த்தம் அனுப்பியுள்ளோம். கிடைக்காவிட்டால் தயவாய் தெரிவியுங்கள்.

Mobile : ***9543221008***; Wattsapp : ***9489740295*** **ஆசிரியர்**

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

சோர்ந்து போகிறவர்களுக்கு ஒரு வார்த்தை

A word to the weary

Rich Carmicheal

இப்பத்திரிகை செய்திகள் மூலம் கிறிஸ்துவின் மகிமை, அவரது மரணம், உயிர்த்தெழுதல், இரண்டாம் வருகை, ஜெபத்தின் தேவை ஆகியவை வற்புறுத்தப்படுகின்றன. இவை மிக மிக முக்கியமானவை. இவைகளின் மூலம் நாம் உற்சாகப் படுத்தப்பட்டு, உந்தப்பட்டு சவால்களையும் பெற்றிருப்பீர் கள். ஆயினும் பாடுகளையும் தொல்லைகளையும் அனுப விக்கும் உங்களுக்கு விசேஷித்த ஆசீர்வாதங் களைக் கொண்டு வரக்கூடிய செய்திகளையும் ஆண்டவர் தருகிறார். பக்தர்களின் வாழ்வில் தேவன், அவர்கள் சோர்ந்து போன வேளைகளில் அளித்த வாக்குகள் அவர் எவ்வளவு கரிசனையுள்ளவர் என்பதையும் நம் மேல் அவர் பரிவுடன் எப்போதும் கூடயிருந்து உதவி செய்கிறவர் என்பதனையும் நமக்குக் கோடிட்டுக் காட்டுகின்றன.

நாம் நமது இயற்கை மற்றும் நமது நிலை ஆகியவற்றின் அளவுகடந்த தேவைகளை நேருக்குநேர் சந்தித்த இயேசுவின் முழுமைத் தன்மையைக் கற்றுக் கொண்டிருக்க முடியாது. ஆனால் அவரோடு கூட நடக்கும்போதுதான் அவரில் நமது தேவைகள் பூர்த்தி செய்யப்படும்.

"மிகவும் ஆழமான பாதாள அறையிலிருந்து அவரை நோக்கிக் கூப்பிடுங்கள். அவர் உங்கள் பெருமூச்சுக்கும், அழு குரலுக்கும் செவிதர மறுப்பதில்லை. நீங்கள் கூப்பிடுகிற நாளில், அவர் உங்கள் அருகில் வந்து பயப்பட வேண்டாம் என்பார். அவர் உங்கள் ஆத்துமாவுக்காக பரிந்து வேண்டுதல் செய்வார். உங்கள் ஜீவனை இரட்சிப்பார்" -F.B.Mayor

"கண்ணீரின் பள்ளத்தாக்கைக் கடந்து செல்லும் போதும், துன்பங்களின் மத்தியிலும் சோதனை, உழைப்பு, துக்கம் ஆகியவற்றின் நடுவிலும், கடினமான பரீட்சை, பெரிய சிறிய போராட்டங்கள் ஆகியவை மறுபடியும் மறுபடியும் வரும்போதும் கர்த்தருடைய வழியில் நடக்க விரும்பும் தேவ பிள்ளைகள் ஆவிக்குரிய நிலையில் சோர்ந்து தளர்ந்து போவதுண்டு. இத்தகைய நேரங்களில் அன்பின் ஆண்டவரது பாதப்படியில் சென்று, பேசும் ஆண்டவரே, நான் சோர்ந்து போனேன்; இந்த வேளைக்கான வார்த்தையை என்னோடு பேசுவீராக என்று ஜெபிப்போம்"

"எனது அன்பின் ஆண்டவருக்கு மகிமையான சாட்சி யாக இதைக் கூறுகிறேன். நான் களைப்படைந்திருந்த வேளை களில் அவர் சமயத்துக்கேற்ற வார்த்தையை என்னோடு பேசினார். இவ்விதமாக நமது ஆண்டவரைத் தூண்டுங்கள். அப்பொழுது அவர் ஏற்ற வார்த்தையை ஏற்ற வேளையில் பேச ஆயத்தமாயிருப்பதைக் கண்டுகொள்வீர்கள்"

"அவரைச் சோதித்துப் பாருங்கள். அப்போது அவரில் நிலைத்திருப்பது எத்தனை நலமானது என்று அறிந்து கொள் வீர்கள். அவர் உங்களுக்கு உதவி செய்வதோடு, உங்களைவிட்டு விலகவும் உங்களைக் கைவிடவும் மாட்டார்" -George Muller

"அங்கே நாம் அவரது அன்பு, பொறுமை ஆகியவை நமது இருதயங்களுக்குள்ளே அவரிடமிருந்து ஊதப்படுவதைக் கண்டு வெற்றி பெற உற்சாகப்படுத்தப்படுகிறோம். அல்லது மிகுந்த தைரியம் நிறைந்த ஒரு சூழலை சந்திக்க நாம் அழைக்கப்பட்டிருக்கலாம். நம் இருதயத்தை நாம் பார்க்கும் போது அங்கு நாம் நமது பெலவீனத்தையும் உதவியற்ற நிலையையுமே காண்கிறோம். ஆனாலும் மறுபடியும் நமது காணப்படாத ஜீவனின் உறைவிடத்திலிருந்து கேட்டு அவரது ஆதரவின் நம்பிக்கையோடு முன்னேறுகிறோம். அவரது வாக்குத்தத்தங்களின் மீது நாம் நிற்கும்போது அவர் நம்மை வெற்றிபெறச் செய்து 'கர்த்தர் எனக்குச் சகாயர்' என்று நாம் கெம்பீரிக்கச் செய்வார்" -A.B.Simpson

"நன்மை செய்வதில் அவரது வாழ்வின் மகிமை, அவரது இரக்கங்கள் மூலம் செய்யும் அதிசயங்கள், விழுந்து போன வர்கள் மீது காண்பிக்கும் பரிவு ஆகியவைகளைப் பாருங்கள். அவரது வாழ்வு மனிதர் மத்தியில் துக்க இருதயங்களுக்கு நல்ல செய்தியை அளிக்காமலிருப்பதில்லை" -Charles H.Spurgeon

பயங்கரமான கஷ்டங்களின் நடுவில் இருக்கிறீர்களா? கர்த்தர் உங்களை அதிகமாக ஆறுதல்படுத்த மேற்கூறிய சத்தியங்களை, இருதயத்தில் ஏற்றுக்கொண்டு கண்களையும் இருதயத்தையும் கிறிஸ்துவுக்கும் ஜெபத்திற்கும் நேராக முழுவதுமாகத் திருப்புங்கள். உங்கள் சூழ்நிலை எதுவாயினும் மேற்கூறிய செய்திகள் உங்களை உற்சாகப்படுத்தி வாழ்விலும் ஊழியத்திலும் தூண்டுதலாக இருக்கட்டும். நமது ஆண்டவர் நமக்காக எவ்வளவு கவலைப்பட்டு அவரது வார்த்தையையும் அன்பையும் தமது குமாரன் மூலமாக வெளிப்படுத்தியுள்ளார்.

நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும், அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள். அவருக்கு இப்பொழுதும் என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக. ஆமென்.

வாசகர் கவனத்திற்கு

2017-ம் ஆண்டு பத்திரிகைக்கு தபால் சலுகை கிடைக்காதது முதல் சுமார் 5 ஆண்டுகள் ஆசிரியனாகிய நான், அதிகம் எழுது கிறேன் என்று அலுவலகத்தில் சொல்லும் அளவுக்கு மிகத் தெளிவாக எழுதினேன்.

நான் விரும்பி படிக்கும் ஒரு பத்திரிகை எனக்கு வராதபடி யினால் போன்பண்ணி விசாரித்தபோது, **மாதந்தோறும் காணிக்கை** அனுப்பும் வாசகருக்கு மட்டும் அனுப்புகிறார்கள் என்ற பதில் வந்ததை பத்திரிகையில் எழுதினேன்.

இன்னுமொரு பத்திரிகையை எனக்கு நிறுத்திவிட்டார்கள்; விசாரித்தபோது **இரண்டு மாதத்திற்கு ஒருமுறை** அச்சிடுகிறார்கள்.

இன்னொரு தம்பி, தபால் சலுகை இல்லாதபடியால் இரண்டு மாதத்திற்கு ஒருமுறை பத்திரிகை வெளியிடுகிறேன் என்று ஆங்கிலத்தில் எழுதின கடிதத்தை அப்படியே வருகையின் தூதன் பத்திரிகையில் வெளியிட்டிருந்தேன்.

இன்றுவரை ஒரு தேவ மனிதர் **மாதந்தோறும்** தபாலில் ரூபாய் 20 அனுப்புகிறார். Y.S.R. என்கிற அன்பு சகோதரர் **மாதந்தோறும்** ரூபாய் 200 மணியாடர் செய்கிறார். இன்னமும் ஏராளமான சாட்சிகளை மாதந்தோறும் அச்சிட்டிருந்தேன்.

ஆயினும் உங்களில் சிலர் வழக்கம்போல வருடத்திற்கு ஒரு முறை ரூபாய் 50, 100, 200 அனுப்பியிருக்கிறீர்கள். உங்க ளுக்கு ஏப்ரல் மாதம் வரை பத்திரிகை வரும்.

கடிதம், மணியாடர், கொரியர் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியுபோர்ட் தெரு,
நாகர்கோவில் – 629 001.
Ph. : 95432 21008

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil-629 001.
Ph. : 95432 21008

காசோலை *(Cheque & Draft)*
வெஸ்லி தேவதாசன் (WESLEY DEVADASON)
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

வங்கி வழியாக காணிக்கை அனுப்புவோர்
உடனே எங்களுக்கு SMS அனுப்புங்கள்
Mobile : 95432 21008, 9489740295, e-mail:varukayinthoothan@hotmail.com

பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **2131010118439**
Punjab National Bank, Nagercoil -1. IFSC Code : **PUNB0213120**

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **61822200136904**
Canara Bank, Ngl-1 IFSC Code : **CNRB0001110**

(1-ம் பக்க தொடர்ச்சி)

நாம் ஒரு சுத்தமான கிறிஸ்தவத்துக்கு இடமளிக்க வேண்டாமா? நமது சுயவாழ்வை நாம் விட்டுவிடாவிடில் கிறிஸ்து நம்மை ஆட்கொண்டு அவர் வாக்குப்பண்ணின ஜீவ தண்ணீருள்ள நதிகள் நம் இருதயங் களிலிருந்து புறப்பட்டு சுகமளிக்கவும், புதுப்பிக்கவும், மறுரூபப்படுத்தவும் வல்லமையாக செயல்படவும் கூடாது. கிறிஸ்து பழைய அஸ்திபாரத்தின்மேல் (சுயநலம்) சிறப்பான மாளிகையை அமைக்க முடியாது. அவர் நாம் நம்மை முற்றிலும் அர்ப்பணம் செய்வதை எதிர்பார்க்கிறார்.

கிறிஸ்து நம்மை அவரோடு சிலுவைக்கு அழைத்துச் செல்லுகிறார். ஆதாமின் வாழ்வு என்ற பழைய மனிதன் கல்வாரியில் அறையப்பட்டு விடுகிறான். இரட்சகரின் அன்புக்கு நேராக நமது கவனத்தைத் திருப்புவோம். அவர் துன்பப்பட தம்மை ஒப்புக்கொடுத்தார். ஜனக்கூட்டத்தின் பரிகாசத்தின் மத்தியில் தாம் இரு கள்வர்களுக்கிடையில் சிலுவையிலறையப்பட சித்தம்கொண்டார். நாம் ஜீவன் பெற தமது சரீரம் முழுவதையும் வதைக்கப்பட ஒப்புக் கொடுத்தார். இவ்வாறு தம்மையே தியாகபலியாக சிலுவையிலறையப்பட்ட ஆழமான அன்புக்கு நாம் நம்மை அர்ப்பணிப்போம்.

அவர் நம்மைத் தமது சிலுவைக்குப் பங்காளிகளாக்குவார். மாம்ச சிந்தையிலிருந்து தூரப்படுத்துவார். ஏனெனில் மாம்ச சிந்தை தேவனுக்குப் பகைமையானது. அவரது மரணத்திற்குள் நாம் ஞானஸ்நானம் பெற்றோம் ரோமர் 6:3. நாம் கிறிஸ்துவைப் பின்பற்று கிறவர்களானால் அவரது மரணம், நமது மரணமாகவும், அவரது உயிர்த்தெழுதல் நமது உயிர்த்தெழுதலாகவும், அவரது வெற்றி நமது வெற்றியாகவும் அமையும்.

"வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையான சன்னிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவரும், தாம் ஒருவரே ஞானமுள்ள வருமாகிய நம்முடைய இரட்சகரான தேவனுக்கு கனமும், மகத்துவமும், வல்லமையும், அதிகாரமும், இப்பொழுதும் எப்பொழுதும் உண்டாவதாக ஆமென்" யூதா.24:25.

ஜெபம்

Prayer

Leonard Raven Hill (1907-1994)

ஜெபத்தைப் போல ஒருவரை மாற்றி அமைக்கக்கூடியது எதுவுமில்லை. ஜெபத்திற்கு ஏன் இத்தனை முக்கியத்துவம்? காரணம் இயேசு நமக்கு இதனை முன்மாதிரியாக ஜெபித்துக் காண்பித்தார். லூக்கா சுவிசேஷத்தை ஜெப சுவிசேஷம் என்றும் கூறலாம். ஏனெனில் இயேசுவின் ஜெபவாழ்வு இங்கு தெளிவாகக் கூறப்படுகிறது. பிற சுவிசேஷங்களை எழுதியவர்கள் யோர்தான் நதிக் கரையில் இயேசு நின்றபோது ஆவியானவர் புறாவைப் போல் இறங்கினார் என்று எழுத, லூக்கா மட்டும் அவர் ஜெபித்துக் கொண்டிருக்கையில் ஆவியானவர் அவர் மேல் இறங்கினார் என்று குறிப்பிடுகிறார். இயேசு 12 சீஷர்களை தெரிந்தெடுத்ததை மற்ற மூன்று சுவிசேஷகர்களும் குறிப்பிட, லூக்கா மாத்திரமே ஒரு இரா முழுவதும் ஜெபத்தில் செலவிட்ட பின்பு இயேசு தமது 12 சீஷர்களைத் தெரிந்து கொண்டதைக் குறிப்பிடுகிறார். மேலும் பிற சுவிசேஷகர்கள் இயேசு சிலுவையில் மரித்ததைக் குறித்து எழுதும்போது, லூக்கா சுவிசேஷகன் அவர் சிலுவையில் மரித்துக் கொண்டிருக்கும்போதும் அவரைத் துன்புறுத்தியவர்களுக்காக ஜெபித்ததை வித்தியாசமாகக் குறிப்பிடுகிறார். அவர் மலையின் மேலேறி அங்கு மறுரூபமானதை மற்ற மூவரும் எழுத, லூக்கா ஒருவரே அவர் ஜெபித்துக் கொண்டிருக்கையில் மறுரூபமானதை எழுதுகிறார்.

அவரது சீஷர்கள் நித்திரைக்குச் சென்ற பின்பு இயேசுவோ தமது வழக்கத்தின்படியே ஜெபிக்கச் சென்றார் என்று வேதவாக்கியங்கள் குறிப்பிடுகின்றன. ஜெபிப்பது அவரது பழக்கம், அவரது வழக்கம். இயேசு தேவகுமாரன். அவர் ஊழியத்திற்காக அபிஷேகம் பண்ணப்பட்டவர். அவரே இவ்வளவு சமயத்தை ஜெபத்தில் செலவிட்டால் நீங்களும் நானும் ஜெபிக்க சமயம் செல விடவேண்டாமா? அனைத்து இக்கட்டு வேளைகளிலும் அவர் ஜெபித்தாரென்றால் நாமும் நமது இக்கட்டான கால கட்டங்களில் அதிகமாக ஜெபிக்க வேண்டுமல்லவா!

ஒரு கூட்டம் சுற்றுலா பயணிகள் ஒரு கவர்ச்சியான கிராமத்தைச் சந்திக்கச் சென்றனராம். அப்போது ஒரு வயோதிபர் ஒரு வேலியண்டை உட்கார்ந்திருப்பதைப் பார்த்து அவரிடம் பயணி ஒருவர் பரிவுடன் 'இந்த கிராமத்தில் ஏதேனும் மகான் பிறந்ததுண்டா?' என்று கேட்டாராம். அந்த முதியவர் தலை நிமிர்ந்து பார்க்காமலே, 'இல்லை, இங்கு குழந்தைகள் மட்டுமே பிறந்திருக்கிறார்கள்' என்று பதிலளித்தாராம். ஆம் மிகப்பெரிய மகான்கள் எல்லாமே குழந்தைகளாகவே பிறந்தார்கள். மிகப் பெரிய பக்தர்களும் ஆவிக்குரிய நிலையில் முன்பு தவழுகின்ற நிலையிலிருந்தனர்.

துணிச்சலான ஜெபம்

தேவன் தமது மிகப்பெரிய பிள்ளைகளை தனிமையில் உருவாக்குகிறார். ஜெபத்தின் இரகசியம் 'அந்தரங்கமாக ஜெபிப்பது'. நீயோ ஜெபம் பண்ணும்போது, "உன் அறை வீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப்பூட்டி, அந்தரங்கத்தில் இருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு, அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற பிதா, வெளியரங்கமாய் உனக்குப் பதிலளிப்பார்" மத்.6:6. அந்தரங்கமாய் ஜெபிக்கும்போது நீங்கள் உங்களைப் பிறருக்குக் காண்பிக்க முடியாது. பகிரங்கமான ஜெபம் பிறரில் தாக்கத்தை ஏற்படுத்தலாம், ஆனால் அது தேவனை செயல்படுத்தச் செய்ய முடியாது.

1 சாமு.1:1-15 வசனங்களில் எல்க்கானா மனைவிகளுடன் சீலோவுக்கு வருடாவருடம் சென்று தொழுது கொண்டதையும், பலிசெலுத்தியதையும் வாசிக்கிறோம். இந்நாட்களில் எல்லாம் அன்னாள் தான் தனது கணவருக்கு ஒரு குழந்தையைப் பெற்றெடுக்க முடியாத ஏக்கத்திலிருந்தாள். ஆனால் அவள் தனது குறைவை ஜெபத்தின் மூலம் தனியாக தேவசமூகத்தில் கொட்டினாள். அவள் மிகவும் அழுதாள். ஆண்டவருக்கு முன்பாகத் தன் இருதயத்தை ஊற்றிவிட்டாள். ஏனெனில் அவள் மனக்கிலேசம் நிறைந்தவள். கசப்பான வாழ்வும் துக்கமான ஆவியும் உடையவளாயிருந்தாள்.

இத்தகைய சூழலில் அவள் தனிமையில் ஜெபிக்கிற ஒரு பெண்ணாக இருந்தாள். 20-ம் வசனத்தில் அதற்குரிய பலனை அவள் பெற்றுக்கொண்டதை வாசித்து அறிவோம்.

தேவன் ஜெபத்திற்குப் பதிலளிப்பதில்லை என்று பலர் சொல்லுவதுண்டு. அது சரியல்ல. நிச்சயமாகவே தேவன் துணிச்சலான ஜெபத்தைக் கேட்கிறவர். **உங்கள் ஜெபவாழ்வுதான் நீங்கள் எவ்வளவாக தேவனைச் சார்ந்து வாழ்கிறீர்கள் என்பதைக் காண்பிக்கும்.** சுயநம்பிக்கை மேலிட்டால் ஜெபம் குறையும், சுயநம்பிக்கையை விட்டு விட்டால் அதிகமாய் ஜெபிப்பீர்கள்.

தேவன் அற்பமானவர்களைத் தெரிந்து கொள்கிறவர். உள்ளவைகளை அவமாக்கும்படி உலகத்தில் இழிவான வைகளையும் இல்லாதவைகளையும் தேவன் தெரிந்து கொண்டார். மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாகப் பெருமை பாராட்டாத படிக்கு அப்படிச் செய்தார் 1 கொரி.1:28-29.

ஏழைகளின் மொழி

ஜெபம் என்பது ஏழைகளின் மொழி என்றும் சொல்லப்படலாம். தாவீது ராஜா மறுபடியும் மறுபடியும் 'கர்த்தாவே, உமது செவியைச் சாய்த்து, என் விண்ணப்பத்தைக் கேட்டருளும்; நான் சிறுமையும் எளிமையுமானவன்' சங்.86:1 என்று ஜெபிக்கிறார். மேலும் சங்.34:6-ல் "இந்த ஏழை கூப்பிட்டான், கர்த்தர் கேட்டு, அவனை அவன் இடுக்கண்களுக்கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார்" என்று படிக்கிறோம்.

அப்போஸ்தலனாகிய பவுல் நல்ல ஆவிக்குரிய மரபுவழியானவரும் மிகப்பிரமாண்டமான கல்விமானுமாயிருந்தார். ஆனால் தனது பெலவீனத்திலும் பெலனுள்ளவராய் உணருகிறார். அவர் தான் ஒன்றுமில்லை என்பதைப் பிறருக்குத் தெரிவிக்க எப்போதும் பிரயாசப்படுகிறார்.

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்க தொடர்ச்சி)

உண்மையான ஜெபம் ஒரு இரு வழித் தொடர்பு. நாம் தேவனோடு பேசு கிறோம், அவர் என்னோடு பேசுகிறார். எப்படி ஆவியானவர் இந்தத் தொடர்பை ஏற்படுத்துகிறார் என்பதை நாம் அறியோம் அல்லது நாம் ஜெபிக்க வேண்டும் என்பதை தேவன் எதிர்பார்க்கிறார் என்பதும் நமக்குத் தெரியாது. ஆனால் தேவன் கிரியை செய்யும் விதம் அது.

எழுந்து ஜெபியுங்கள்!

மிகப்பெரிய கிறிஸ்தவக் கல்வி யாளரும் வீட்டன் கல்லூரியில் பணி புரிந்தவருமான Dr. V.றெய்மாண்ட் எட்மான் என்பவரோடு ஒரு மாநாட்டி லிருந்தேன். அவர் தாம் இக்குவேடாரில் மிஷனெறியாயிருந்தபோது ஏற்பட்ட ஒரு அனுபவத்தைப் பகிர்ந்து கொண் டார். அங்கு சென்ற சில காலங்களுக்குள் வியாதிப்பட்டு மரணத்துக்கேதுவாயிருந் தார். அவருக்குக் கல்லறை ஆயத்தமாகிக் கொண்டிருந்தது. ஆனால் திடீரென அவர் படுக்கையில் உட்கார்ந்து மனை வியை அழைத்தார். என்ன நடந்த தென்று யாருக்கும் தெரியாமலிருந்தது.

பல ஆண்டுகளுக்குப் பின் அவர் இச்சம்பவத்தை பாஸ்டனில் நடந்த ஒரு கூடுகையில் கூறினார். கூட்டம் முடிந்ததும் ஒரு பெண்மணி வந்து நீங்கள் மரணத்தை நெருங்கிய நாள் எது எனக் கேட்டார். இக்வேட்டரில் அது எந்த நேரம்? பாஸ்டனில் அது எந்த நேரம் எனக் கேட்டபோது அவர் அளித்த பதில் அப்பெண்மணியின் முகத்தில் சந்தோ ஷத்தை அளித்தது. தன் கையிலிருந்த ஒரு சிறு புஸ்தகத்தைக் காண்பித்து "அதிகாலை 2 மணிக்கு தேவன் என்னை எழுப்பி ஜெபிக்கச் சொன்னார். இக்வேட ரிலிருக்கும் றெய்மண்ட் எட்மானை சாத்தான் கொல்ல முயற்சிக்கிறான்" என்றார் என்பதை எழுதியிருக்கக் காண்பித்து, நான் உடனே எழுந்து ஜெபித்தேன் என்றாள்.

டங்கன் கேம்ப்பெல் என்பவரும் ஒரு சம்பவத்தை கூறுகிறார். தனது வயல் நிலத்தில் பணிசெய்து கொண்டிருந்த ஒரு விவசாயியின் ஜெபம் கேட்கப்பட்ட ஒரு விசேஷித்த சம்பவம் அது. அவன் கிரேக்க தேசத்துக்காக ஜெபித்துக் கொண்டிருந்தவன். டங்கன் அந்த விவசாயியிடம் ஏன் அந்தத் தேசத்துக்காக ஜெபிக்கிறாய் என்பதற்குப் பதிலாக எனக்குத் தெரியவில்லை, எனது ஆவியில் ஒரு பாரம் ஏற்பட்டது. தேவன் என்னிடம் "நீ ஜெபம் பண்ணு, கிரேக்க தேசத்தில் ஒருவர் மிகக் கேடான சூழலில் இருக்கிறார் என்று கூறினார்" என்றார். மேலும் "எனக்கு விடுதலை கிடைக்கு மட்டும் ஜெபித்தேன்" என்று கூறினார். இரண்டு மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு இந்த விவசாயி ஒரு மிஷனெறி கூடுகை யில் பங்கெடுத்தார். அன்று பேசிய மிஷனெறி தாம் முன்பு கிரேக்க தேசத்தில் மிஷனெரி பணி செய்ததாகவும் அங்கு பயங்கர பிரச்சனை ஏற்பட்டு, தேவன் ஆச்சரியமாக விடுதலை அளித்ததாகவும் குறிப்பிட்டார். அந்த விவசாயி அந்த நாளை தனது குறிப்பேட்டில் பார்த்த போது அதே நாளில் அவர் விடுதலை பெற்றதைக் கண்டுகொண்டார். கிரேக்க தேசத்தில் பணியாற்றிய பெயர்தெரியாத ஒரு மிஷனெறிக்காக ஸ்காட்லாந்து கடற்கரையோர தீவில் வாழ்ந்த ஒரு விவசாயி ஜெபித்திருக்கிறார்.

இவ்வாறு தேவன் உங்கள் இருதயத்தில் ஏதேனும் பாரம் தந்திருந் தால் அதை நிறைவேற்றுங்கள்.

யார் கர்த்தருடைய பர்வதத்தில் ஏறுவான்?

ஸ்காட்லாந்தில் தான் பணிபுரிந்த போது ஏற்பட்ட ஒரு அனுபவத்தையும் டங்கன் கூறுகிறார். "என்னால் பிரசங் கிக்கவோ தேவனுடைய பாதபடியில் சேரவோ முடியவில்லை". எனவே பிரசங் கிப்பதை விட்டுவிட்டு ஜான் கேமரான் என்பவரிடம் ஜெபிக்கக் கூறினாராம்.

அந்த வாலிபன் சங்.24:3,4 வசனங்களை மனப்பாடமாய் கூறி விட்டு ஜெபிக்க ஆரம்பித்தான். சுமார் 20 நிமிடங்கள் ஜெபித்த பின்பு பிசாசுக்கு எதிராகப் போராடி ஜெபித்தான். சுமார் 45 நிமிடங்கள் ஜெபித்த பின்பு பரலோக வாசல் திறந்தது. தேவ ஆவியானவர் அந்த இடத்தையும் சுற்றிலுமுள்ள இடங் களையும் நிரப்பினார். அந்த ஜெபத்தின் மூலம் பெரிய எழுப்புதல் பிறந்தது.

மல்கியா 3:1-ல் "..... நீங்கள் தேடுகிற ஆண்டவரும், நீங்கள் விரும்பு கிற உடன்படிக்கையின் தூதனுமானவர் தம்முடைய ஆலயத்துக்கு தீவிரமாக வருவார் ....." ஒரு கூட்டம் மேய்ப்பர் கள் இரவிலே தங்கள் மந்தைகளை பெத்லகேமின் வயல்வெளிகளில் தங்கிக் காத்திருந்தபோது திடீரென பரம சேனை யின் திரள் வந்து நற்செய்தி கூறியதை நாம் அறிவோம். மேல் வீட்டறையில் சீஷர்கள் கூடிக் காத்திருந்து ஜெபித்த போது திடீரென தூய ஆவியானவர் அவர்கள் மேல் ஊற்றப்பட்டார்.

1737-ம் ஆண்டு ஆகஸ்ட் 13-ம் நாள் ஒரு புதன்கிழமை ஒரு சிறுகூட்டம் மொரேவியர்கள் ஒரு ஜெபக்கூடுகையில் காத்திருந்தபோது திடீரென தூய ஆவி யானவர் அவர்கள் மேல் இறங்கினார். அன்று ஆரம்பித்த எழுப்புதல் நூற் றாண்டுகளாக தொடர்ந்தது. அந்த ஜெப அறை ஒருபோதும் காலியாகவே இருக்க வில்லை. இதுவே மிக நீண்ட ஜெபக் கூடுகை. தேசங்களின் பெயர்களை உச்சரிக்கத் தெரியாத சிறுவர்களும் அந்த ஜெபத்தில் தரித்திருந்தது சிறப்பானது.

நமக்கு ஏன் எழுப்புதல் ஏற்படவில்லை?

அயர்லாந்தின் ஒரு பழைய பட்டணத்தில் மக்கள் பயபக்தியுடன் ஒரு இடத்தைக் காண்பிப்பார்கள். அங்கு நான்கு வாலிபர்கள் கூடி இரவுதோறும் எழுப்புதலுக்காக ஜெபித்து வந்தனர். வேல்ஸ் நாட்டில் குன்று பகுதிகளில் மூன்று நான்கு வாலிபர்கள் சுமார் பதினெட்டு, பத்தொன்பது மட்டுமே நிரம்பியவர்கள் ஜெபித்தனர். இவர் களெல்லாரும் தேவனை விடாப்பிடியாக பிடித்துக்கொண்டு 'இல்லை' என்ற பதிலுக்கு உடன்படாமல் ஜெபித்தனர். ஒரு எழுப்புதல் பிறப்பதற்காக அவர்கள் ஜெபித்தனர். உங்கள் சபையில் எழுப்பு தல் ஏற்பட வேண்டுமா? சொகுசுகளை மறந்துவிடுங்கள். **எழுப்புதலுக்கு மிகுந்த விலைக் கிரயமுண்டு.**

நமது நாட்டில் ஏன் எழுப்புதல் இல்லை என்றால் நாம் எழுப்புதலின்றி திருப்தியுடன் வாழுகிறோம். நாம் தேவனைத் தேடுவதற்குப் பதிலாக அற்புதங்களையும், பெரிய மாநாடு களையும் ஆசீர்வாதங்களையும் தேடுகி றோம். எண்.11-ம் அதிகாரத்தில் மோசே தேவனிடம் தன்னால் சுமக்கக் கூடாத பாரத்தைச் சுமக்கக் கேட்பதாகவும், அதை தான் கையாள முடியாது என்றும் தேவன் தாமே எதையாகிலும் செய்யவும் அல்லது தன்னைக் கொன்று போடவும் கேட்கிறான். நீங்கள் "தேவனே எழுப்பு தலை அனுப்பும், இல்லாவிடில் என்னைக் கொன்று போடும்" என்று உங்கள் தேசத்துக்காக ஜெபிக்கிறீர்களா? பாட்ரிக் ஹென்றி விடுதலை தாரும் அல்லது மரணத்தைத் தாரும் அதாவது எழுப்பு தலைத் தாரும் அல்லது நான் மரிக்கட்டும் என்று நாம் ஜெபம் செய்ய அழைக்கப் படுகிறோம்.

ஆதியாகமம் 30-ம் அதிகாரத்தில் ராகேல் யாக்கோபிடம் சென்று, மனபாரத்துடன், எனக்குப் பிள்ளை கொடும், இல்லாவிட்டால் நான் சாகிறேன் என்றாள். நீங்கள் தேவனுக்கு முன்பாக விழுந்து ஆவிக்குரிய பிள்ளை கள் தேசத்தில் பிறக்க ஜெபிப்பீர்களா? ஆவியால் நிரப்பப்பட்டவர்கள் ஜெப வாழ்வில் குறைவுபடக்கூடாது.

ஜெபம் காரியங்களை மாற்றும் என்று சொல்லுகிறோமல்லவா; ஜெபம் மக்களை மாற்றும். மக்கள் காரியங்களை மாற்றுவார்கள். காபிரியேல் தன் பணியைச் செய்ய நாம் எதிர்பார்க்கி றோம். ஆனால் தேவன் நம்மைப் பார்த்து நீங்களே செய்யுங்கள் எனது பெலன் உங்களுக்குப் போதும் என்கிறார்.

அன்னாளைப் பாருங்கள்! அவள் தேவசமூகத்தில் சென்று அழுதாள். அவள் மனம் வியாகுலத்தால் நிறைந்திருந்தது. அவளுக்கு ஒரு பராது இருந்தது. அவள் உபவாசித்து ஜெபித்தாள். பதிலையும் பெற்றாள்.

இயேசுவானவர் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவராயிருந் தார். அவர் ஜெபத்தைப் பழக்கமாகவும் வழக்கமாகவும் கொண்டிருந்தாரே! சிறந்த கல்விமானும் ஊழியக்காரனு மான பவுல் தான் பெலவீனன் எனக்கூறி அரசனாயிருந்தும் தன்னை எளிய வனாகத் தாழ்த்தி கர்த்தரை நோக்கி ஜெபித்தான். இன்னும் எத்தனையோ பேரை வரிசைப்படுத்தலாம் அல்லவா!

ஜெபத்தைப் போல மாற்றுரு வாக்கத்தை ஏற்படுத்தக் கூடியது எதுவுமேயில்லை இல்லை இல்லை.

உங்கள் சபையில் எழுப்புதல் ஏற்பட வேண்டுமா? சொகுசுகளை மறந்து விடுங்கள். எழுப்புதலுக்கு மிகுந்த விலைக் கிரயமுண்டு.

கிறிஸ்துவின் மகிமையின் சுவிசேஷம்

The gospel of the glory of Christ

Charles H.Spurgeon

'கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி' என்ற வார்த்தைகள் முத்தைப்போல பிரகாசிக்கின்றன 2 கொரி.4:4.

கிறிஸ்துவின் சுவிசேஷம் பவுலின் ஆத்துமாவை, கிதியோனின் உலர்ந்த தோலை பனி நனைத்ததுபோல நனைத்து விட்டது. சிலுவையிலறையப் பட்ட கிறிஸ்துவின் மகிமையைத் தவிர வேறெதையும் எண்ணிப்பார்க்கவோ, பேசவோ அவரால் கூடவில்லை. அரசியலில் பல முக்கிய நிகழ்வுகள் அவர் காலத்தில் நிகழ்ந்தன. அவற்றை அவர் பொருட் படுத்தியதில்லை. அனேக சமூகப் பிரச்சனைகளுக்கும் தீர்வு காண வேண்டி யதிருந்தது. ஆனால் நமது இரட்சகரைக் குறித்துப் பிரசங்கிப்பது ஒன்றே அவரது தீர்வாயிருந்தது. ஒரே ஒரு காரியத்திற்காக வாழவும் சாகவும் அவர் நோக்கங் கொண்டிருந்தார். கிறிஸ்துவை ஆதாயப் படுத்திக் கொள்ளவும், அவரில் வாழவும் அவர் தமது ஜீவனை அற்பமும் குப்பையு மாக எண்ணினார்.

கிறிஸ்துவின் ஆளத்துவம்

சுவிசேஷத்தின் மகிமை நமது ஆண்டவரின் ஆளத்துவத்தில் அடங்கி யுள்ளது. தேவன் மனிதரின் மீட்பராக வந்தார். "இவர் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்ட சர்வத்திற்கும் மேலான தேவன்" ரோமர்.9:5. மேலும் தமது முதற்பேறானவரை உலகத்தில் பிரவேசிக்கச் செய்த போது தேவதூதர் யாவரும் அவரைத் தொழுதுகொள்ளக் கடவர்கள் என்றார் எபி.1:6. தேவ தூதர்களோடு சேர்ந்து நாம் இயேசுக் கிறிஸ்துவை தேவனாக ஆராதிக்கிறோம். நமது இரட்சகர் நம்மைப் போல ஒரு மனிதராக வந்தார். ஆனால் அவரில் தீமை வாசமாயிருக்கவில்லை. எந்தப் பாவச் செயலும் அவரைக் கறைப்படுத்திய தில்லை. தேவ, மனித இரு தன்மைகளும் அவரில் ஆச்சரியமாக இணைந்திருந்தன. அவர் ஒப்பற்றவர். பிதாவின் மகிமைப் பிரகாசம்.

தேவகுமாரன் விசேஷித்த விதமாக மனிதருடைய இரட்சிப்பைப் பொறுப்பெடுத்துக் கொண்டார். எனவே அவர் மாம்சமாகி நமக்குள்ளே வாசம் பண்ணினார். அவருடைய மகிமை யினைக் கண்டோம். அனேக சுகவீனர் தங்கியிருக்கும் ஒரு மருத்துவமனைக்கு ஒரு சிறந்த மருத்துவர் வரப் போவதா யிருந்தால் அந்தச் செய்தியை பிணியாளி களுக்கு அறிவிப்பதில் நான் எவ்வளவு பெருமிதமடைவேன்! அவர்களுக்கும் அது மிகவும் ஒரு நல்ல செய்தியாயிருக் குமே. "இந்த மருத்துவர் அளவற்ற ஞானமும், விசேஷித்த திறமையுமுடை யவர். மேலும் அவர் மிகவும் அன்பும் உருக்கமும் நிறைந்தவர். மட்டுமின்றி அவர் மிகுந்த வல்லமையுடையவர்" என்று நான் அறிவித்தால், அந்தப் பிணி யாளிகளின் முகங்கள் படுக்கையில் புன் முறுவலுடன் காணப்படுமல்லவா!

இந்தச் செய்தியே அவர்களைப் பாதி குணமாக்கிவிடும். அது போலவே, சோர்ந்து நம்பிக்கையிழந்த ஆத்துமாக களிடம் அவர்களை இரட்சிக்க வந்திருப் பவர் தேவனாகிய கிறிஸ்து என்று சொல்லும்போது மகிழ்ச்சியடைவார் களே. கிறிஸ்து ஆச்சரியமாக சுவிசேஷத் தின் நடுநாயகமாயிருக்கிறார். அவர் ஒரு தூதனல்ல. அவர் மனிதன், ஆனால் இம்மானுவேலாக நம்மோடிருக்கிறார் மத்.1:73. அவரது ஐசுவரியம் அளவற்றது. அவரது கிருபைக்கு எல்லையேயில்லை. குற்றம் நிறைந்தவர்களே, குற்றவுணர் வுடன் படுக்கையில் இருப்பவர்களே, மரணத்தின் வாசலில் நிற்பவர்களே, துக்கத்துடனிருக்கிறீர்களா? உங்களுக்குத் தேவையான இரட்சகர் இதோ இருக் கிறார். அவரை நோக்கிப் பாருங்கள்.

இரட்சகரின் தெய்வீகத் தன்மை யை சந்தேகித்தால் நமது நம்பிக்கையின் அஸ்திபாரம் தகர்ந்துவிடும். ஆனால் அவரைத் தேவனாகப் பார்ப்போமானால் அவரால் கூடாதது ஒன்றுமில்லை என்ப தனை மனதிலாக்குவீர்கள். அவரது மனுஷத்துவத்தை சந்தேகித்தால் உங்கள் ஆறுதலை இழந்து விடுவீர்கள். ஏனெனில் அவரிலிருந்து புறப்படும் இரக்க உருக் கத்தைக் காண இயலாது. அன்பானவர் களே, ஆண்டவராகிய இயேசு உங்கள் முன் நிற்கிறார். தேவ கட்டளைப் படியும், கர்த்தருடைய ஆவியானவர் அளவில்லாமல் அவர்மேல் இறங்கின வராகவும் நிற்கிறார். அவரது முதலும் முதன்மையுமான செய்தியாகிய இரட் சிப்பு உங்களுக்கு பரிபூரணமாகவும் நிச்சயமாகவும் அளிக்கப்படுகிறது. அவரது மகிமை உங்களுக்குச் சுவிசேஷ மாயிருக்கிறது.

கிறிஸ்துவின் அன்பு

கிறிஸ்துவின் மகிமை அவரது ஆளத்துவத்தில் மட்டுமின்றி, அவரது அன்பிலும் காணப்படுகிறது. நித்திய காலத்திலிருந்தே தேவகுமாரன் தமது ஜனத்தை நேசிக்கிறார். "அவருடைய பூலோகத்தில் சந்தோஷப்பட்டு, மனு மக்களுடனே மகிழ்ந்து கொண்டிருந் தேன்" நீதி.8:31. இவ்வுலகில் மானிடனாக வருவதற்கு நீண்ட காலங்களுக்கு முன்ன தாகவே பிதா தமக்களித்த மானிடரை அவர் நேசித்தபடியால் அவர்களோடு ஒன்றாயிருக்கத் தீர்மானித்தார். மட்டு மின்றி அவர்களது மீட்புக்காக அதிக விலைக்கிரயமாக தனது ஜீவனையும் அளிக்க முன்வந்தார். அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட முழுக்கூட்டத்தையும் தனது முன்னறிவால் ஒரு கண்ணாடியில் பார்ப்பது போல பார்த்து நித்தியமான தமது அன்பினால் அவர்களில் அன்பு கூர்ந்தார். ஆரம்பம் முதலேயே இரட் சகரின் இருதயத்தில் பிரகாசித்த அந்த அன்பு ஒருபோதும் முடிவதில்லை.

அவரது மகிமையைப் பாருங் கள்! அவர் இவ்வளவாய் அன்பு கூர்ந்த படியால் பரலோகம் அவரை அடக்கி வைக்கமுடியவில்லை. அவர் தமது அன்பால் நம்மை இரட்சிக்கும்படி நமக்காக இறங்கிவந்தார். இன்னும் நம்மை அவர் நேசிக்கிறார். 'இவ்வுலகத் திலிருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்புவைத்தபடியே முடிவுபரியந்தமும் அவர்களிடத்தில் அன்பு வைத்தார்' யோவா.13:1. அன்பின் எட்டாத மகிமை தெய்வீக இரட்சகரது இருதயத்தை எட்டியுள்ளது. இந்த அன்பின் மகிமை ஆரம்பமும், முடிவும், மாறுதலும், எல்கையும் இல்லாததால் சுவிசேஷத்தின் ஜீவ இரத்தமாயிருக்கிறது. நமது இயேசு வின் அன்பு மிகப்பெரிய சந்தோஷ செய்தி. அவர் நமது மகா பெரிய மருத்து வர். அவர் பிணியாளிகளை நேசிக்கிறார். அவர்களை குணமாக்குவதில் சந்தோஷ மடைகிறார். அவர்களை ஆசீர்வதிக்க அதிக ஆவலோடு நிற்கிறார். அவர் பாவி களின் நண்பர். 'இயேசு என் ஆத்தும நண்பர்' என்று என் ஆத்துமா எவ்வளவு பரவசத்துடன் பாடுகிறது.

கிறிஸ்துவின் அவதாரம்

கிறிஸ்துவின் மகிமை அவர் பெத்லகேமில் பிறக்கவும் நாசரேத்தில் வளரவும் ஏதுவாயிற்று. அவர் ஒரு தச்சனுடைய மகனாகப் பிறந்தது மரியாதைக் குறைவாகத் தென்படலாம். ஆனால் அவர் மத்தியஸ்தராகி நமது மாம்சத்திற்கும் இரத்தத்திற்கும் பங்காளி யாகிறார். அவரது ஏழ்மை, வெட்கம் ஆகியவற்றில் மகிமையிருக்கிறது. அவர் தலைசாய்க்க இடமற்றிருந்ததும், களைப் படைந்ததும், பசிதாகமாயிருந்ததும் கூட அவரது மகிமையை விளங்கப் பண்ணு கின்றன. அளவுகடந்த மகிமை கெத்சம னேயிலும், அவர் சிந்திய இரத்த வேர்வை, சிலுவை மரணம் ஆகியவற்றி லும் விளங்குகின்றன. அவர் உமிழப் பட்டதும், விலாவில் ஈட்டியால் குத்தப் பட்டதும், பரலோகம் அவருக்கு அதிக அளவிலான மகிமையை அளித்தன.

கிருபை மனதுருக்கம் ஆகியவை மனுவுருவான அவரைச் சூழ்ந்திருந்தன. இதுவே பாவத்தைக் குறித்து உணர் வடைகிறவர்களுக்குச் சுவிசேஷமாகிறது. தேவனை மாம்ச ரூபத்தில் பார்க்கும் போது நாம் ஒப்புரவாகுதலை விரும்பு கிறோம். நமது பலவீனங்களை ஏற்றுக் கொண்டு நமது துக்கங்களைச் சுமந்தார் என்று காணும்போது, நாம் மன்னிப் பையும் சுகத்தையும் எதிர்பார்க்கிறோம். ஒரு கன்னியின் வயிற்றில் உற்பவித்துப் பிறந்து, நம் மத்தியில் சேவை செய்கிற வராகவும், பாடுபடுகிறவராகவும் வாழ்ந்த தால் நமக்கு நம்பிக்கையை ஏற்படுத்தி யுள்ளார். உலகத்தை ஆக்கினைக்குள் ளாகத் தீர்க்கும்படி அவர் வராமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற் காக வந்தார் யோவா.3:17. நன்மை செய்த அவர் வாழ்வும், இரக்கமுற்று அவர் செய்த அற்புதங்களும் விழுந்துபோன மனு மக்களுக்கு அவர் காண்பித்த பரிவும் தொய்ந்து போன இருதயங்களுக் கெல்லாம் நற்செய்தியல்லவா?

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்க தொடர்ச்சி)

தேவன் தமது மகிமையை மண் பாண்டங்களாகிய நம்மில் விளங்கச் செய்தார். வார்த்தை மாம்சமானபடி யால் தேவ மகிமையை நாம் கண்டோம். அன்பின் மேலாண்மையும் நமக்கு வெளிப்பட்டது. விசுவாசிக்கிற அனை வருக்கும் கிருபையின் சுவிசேஷத்தைக் காணமுடிகிறது.

கிறிஸ்து பாவ நிவாரண பலி

கிறிஸ்துவின் மகிமை அவர் பாவநிவாரண பலியாக்கப்பட்டதன் மூலமாகவும் வெளிப்படுகிறது. அவர் சிறுமைப்படுத்தப்பட்டு வெட்கப் படுத்தப்பட்டது உண்மைதான். ஆனால் அதுவே அவரது மகிமை. அவருடைய சிலுவை மரணம் அனைத்து அன்பு இருதயங்களுக்கும் மகிமையாகவே யிருக்கிறது. அவரது ஆடை அவரது இரத்தத்தால் நனைந்தது எத்தனை சிறப்பானது! அவர் பதினாயிரங்களில் சிறந்தவர். அவரை இரத்த வேர்வை யோடு பார்க்கும்போது நமது அன்பு, பயபக்தி ஆகியவை பெருகவில்லையா! அவரது ஆடை மிகப்பெரிய அரசரு டைய அங்கியைவிட அழகாகவும் மகிமையாகவும் தோன்றவில்லையா? அவரது பாதத்தில் விழுந்து பன்மடங்கு பயபக்தியுடன் அவரைப் பணிந்து கொள்வோம்.

அவர் நமக்குப் பதிலாக மரணத்தை ஏற்றுக்கொண்டார் என்பது சுவிசேஷத்தின் சாரம். இயேசு கிறிஸ்து நமக்குப் பதிலாக பாடுகளை ஏற்றுக் கொண்டார். "அவர் தாமே தமது சரீரத் திலே நம்முடைய பாவங்களைச் சிலுவை யின்மேல் சுமந்தார்" 1 பேது.2:24. அவரது சிலுவையின் மகிமை அவரது மகிமையை இன்னும் அதிகரிக்கச் செய்கிறது. இதுவே சுவிசேஷம். அவர் சிலுவையிலே தெய்வீக நியாயத்தீர்ப்பின் முழு பாரத் தையும் ஒரே இடத்தில் (சிலுவையில்) சகித்தார். யெகோவாவின் இரும்புச் சட்டம் நம்மைத் துண்டு துண்டாக் குவதற்குப் பதிலாக அவர்மேல் விழுந்தது. சிலுவையின் மரண பரியந்தம் அவர் கீழ்ப்படிந்தார் பிலி.2:8. அதனால் மரணத்தைக் கொன்று மரணத்தின் மேலும் சாத்தான் மேலும் வெற்றி சிறந்தார்.

"அவரது சிலுவை நிச்சயமாக
மகிமைக்கும் கீர்த்திக்கும் அஸ்திபாரமிட்டது
மரித்தவர்களின் தேசம் வழியாக
அவர் கிரீடத்தைப் பெற கடந்து சென்றார்"

அவரது தியாக மரணம் பாவத்தை அழித்து நியாயப் பிர மாணத்தை இரட்சிப்பின் சுவிசேஷ மாக்குகிறது

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்

அவரது மகிமையின் இன்னொரு மேலானபடி அவரது உயிர்த்தெழுத லாகும். மரணத்தின் கட்டுகள் அவரை அடக்கி வைக்க முடியவில்லை. அவர் மரித்தார் என்பது உண்மை. அவரது சரீரம் மரித்தது. ஆனால் அது அழிவைக் காணவில்லை. எனவே கல்லறைக்குள் குறிப்பிட்ட காலம் தூங்கிய பின்பு அவர் வெளிச்சத்திற்குள்ளும் விடுதலைக் குள்ளும் வந்தார். ஜீவிக்கும் கிறிஸ்து உயிர்த்தெழுதல் மூலம் இன்னுமாக மகிமைப்பட்டார்.

"உயிர்த்தெழுந்தவர் பரத்தை
வெளிச்சமாக்கிய சந்தோஷத்தை
சொந்தமாக்கினார்"

"உயிரோடெழுந்து நமது ஆக்கினையை
முறியடித்தார், கல்லறையை உடைத்து
மரணக் கைதிகளை விடுவித்தார்"

"தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து
எழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட
தேவகுமாரனாயிருக்கிறார்" ரோமர் 1:5

அவர் உயிரோடிருப்பதற்காக வும், நமக்காகப் பரிந்து பேசிக் கொண்டி ருப்பதற்காகவும் களிகூருவோம். இது நம் அனைவருக்கும் நற்செய்தி. அவர் உயி ரோடிருப்பதால் நாமும் உயிரோடிருப் போம். "மேலும் தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகை யால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவருமாயிருக்கிறார்" எபி.7:25. ஆம் இதுதான் உயிர்த்தெழுந்த கர்த்தரின் மகிமை. இதனை ஆழமாக சிந்தியுங்கள், உத்தமமாக தியானியுங்கள். அப்படிச் செய்யும் போது மிகுந்த சந்தோஷத்தின் ஆரவாரத்தைக் கேட்பீர்கள். எனவே இயேசுவையே நாம் நோக்குவோம். அவரது உயிர்த்தெழுதல் நமது குற்ற உணர்வுகளிலிருந்து நம்மை விடுவிக்க வும், மனச்சோர்விலிருந்து தூக்கியெடுக்க வும், மரணக் கட்டிலிருந்து விடுதலை தரவும் உத்தரவாதம் அளிக்கிறது.

கிறிஸ்துவின் சிங்காசன அமர்வும் இரண்டாம் வருகையும்

இன்னுமாக உங்கள் கண்களை உயர்த்தி, நமது ஆண்டவர் சிங்காசனத் தில் அமருவதையும், அவரது இரண்டாம் வருகையையும் இவற்றின் மகிமையையும் நோக்குவோம். அவர் தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். முன்பு வெட்கத்தின் சின்னமாம் சிலுவையில் அறையப்பட்டவர் இன்று அகில உலகத் தின் அதிகாரியாக சிங்காசனத்தில் வீற்றி ருக்கிறார். ஆணிகள் கடாவப்பட்ட அவர் கரங்களில் உலகம் அனைத்தையும் ஆளும் செங்கோலிருக்கிறது. எல்லாம் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத் தப்பட்டாயிற்று. முன்பு மனிதரைப் போல தேவதூதரிலும் சற்று சிறியவராக மரணத்தை அனுபவிக்கப் பிறந்தவர், இப்போது மகிமையாலும், கனத்தாலும் முடிசூட்டப்பட்டுள்ளார் எபி.2:9. இதுவே நமக்கு நற்செய்தி. அவர் தமது பகைஞரையெல்லாம். மேற்கொண்டு பரத்திலும், இகத்திலும் சகல வல்லமை யையும் நமக்காகப் பெற்றுதந்து விட்டார். அவரை நம்பி அவர் அன்பை ருசிப்போம்.

அவர் மகிமையில் வீற்றிருப்பது, அவரது இரத்தத்தால் மீட்கப்பட்ட அனைவரும் ஏற்றகாலத்தில் அவரோடு இருப்பதற்கு உத்தரவாதமாயிருக்கிறது. அவரது இரண்டாம் வருகைக்காக நாம் காத்திருப்பது நமது தெய்வீக நம்பிக்கை. நாம் நித்திரையடைவதற்கு முன்பாகவே கர்த்தர் ஆரவாரத்தோடும், தூதர்களின் எக்காள தொனியோடும், தேவ சத்தத் தோடும் பரத்திலிருந்து இறங்கி வரலாம். அப்போது நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்தில் சூரியனைப் போல பிரகாசிப் பார்கள் மத்.13:43; 1 தெச.4:13-18. நமது களைப்பின் நாட்கள் முடிந்து போகும். பல்வேறுவிதமான குழப்பங்கள், பாவங் கள், குறைவுகள் போன்ற அனைத்தும் முடிவுக்கு வரும். சத்தியமும், தூய்மை யும் மேலாண்மை பெறும்.

சகோதரர்களே, எனது வாய், நாவு ஆகியவைகளின் தடைகள் நீங்கி, இந்த தொல்லைதரும் அவயவங்களில்லா மலே என் இருதயத்தின் மூலம் நான் பேசக்கூடுமானால், சிங்காசனத்தில் வீற்றிருக்கும் எனது பரம எஜமானின் மகிமையில் உங்களைக் களிகூரச் செய்வேன். இன்று மட்டுமல்ல அவர் வரும் நாளிலும் அப்படியே செய்வேன். யோவான் பத்மு தீவில் அவரைக் கண்ட போது அவருடைய பாதங்களில் மூர்ச்சித்து விழுந்ததுபோல நாமும் நம்பிக்கையின் உணர்ச்சியுடன் அவரை சந்திப்போம். நீங்கள் கிறிஸ்துவை உங்கள் விசுவாச அறிக்கையிலிருந்து அகற்றிவிட்டால் இந்த நற்செய்திகள் அனைத்தையும் இழந்துவிடுவீர்கள்.

கிறிஸ்துவைப் பிரஸ்தாபம் பண்ணுங்கள்

எவ்வளவு அதிகமாக சுவிசேஷத் தை நாம் பிரசங்கிக்கிறோமோ அவ்வளவு அதிகமாக கிறிஸ்துவை நாம் பிரஸ்தாபப் படுத்த வேண்டும். நீங்கள் கிறிஸ்துவை உயர்த்துவீர்களானால் சுவிசேஷமும் உயர்த்தப்படும். சுவிசேஷத்தைப் பிரசங் கிக்கிற நீங்கள், கிறிஸ்துவை உயர்த்தா விடில் மக்களுக்கு அப்பத்திற்கு பதிலாகத் தவிட்டைக் கொடுக்கிறீர்கள் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். ஆண்டவராகிய இயேசு மகிமையான உயர் சிங்காசனத்தில் உட்கார்ந்திருக்கிற படியே மனுஷகுமாரனாக மனுமக் களுக்கு இரட்சிப்பாகவும் இருக்கிறார். கிறிஸ்துவை சிறிதளவாகவே பிரசங்கிக் கிறீர்களானால் சிறிதளவாகவே சுவி சேஷம் அறிவிக்கிறீர்கள். எப்படியா யினும் உண்மையான நற்செய்தி என்பது கிறிஸ்துவின் மகிமையின் நற்செய்தி ஒன்றே.

யோசேப்பு

ஒவ்வொரு உயர்வுக்கு முன்பும் மாபெரும் பரிசோதனை காத்திருக் கிறது என்பதை மறக்காதே. பாவத்திற்கு இணங்காததினால் 'அடிமையாகிய எபிரேய வாலிபன்' என சித்தரிக்கப்பட்டு அதிக தண்டனை உள்ள காவற் கூடத்தில் போடப்பட்டார். இவைகளின் நடுவில் சுமார் 13 ஆண்டுகள் ஒரு நாள் கூட தேவன் ஒரு சொப்பனமும் தரவில்லை. எந்த விதமான அசரீய வார்த்தையும் கேட்டதில்லை. ஆனால் யோசேப்புடன் கூட தேவன் இருந்தார்.

கிறிஸ்துவை அறிதல் - நடைமுறை விளைவுகள்

Knowing Christ - The practical results

George Mullar (1805-1898)

'இப்படி நான் அவரை அறிகிற தற்கு' என்று பவுல் அப்போஸ்தலன் பிலி.3:10-ல் எழுதுகிறார். அப்போஸ் தலனின் முக்கிய ஆசை என்ன? ஆசீர் வதிக்கப்பட்டவராகிய ஆண்டவரை அவரது முழுமையான பண்பிலும், அழகிலும், பரிசுத்தவான்கள் இறுதியில் மகிமையில் காண்பதுபோல காண வேண்டும் என்பதே. எனவே நாம் சரீரத்திலிருக்கும்போதே பயபக்திக்குரிய ஆண்டவரை அவரது முழுமையான அழகில் தரிசிக்க வேண்டும் என்பதே.

கிறிஸ்துவின் சிந்தைக்கு ஏற்றதாக

"பிரியமானவர்களே, இப்பொ ழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக் கிறோம். இனி எப்படியிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை. ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக் கிற வண்ணமாகவே நாம் அவரை தரிசிப் பதினால் **(அறிவதினால்)** அவருக்கு ஒப்பா யிருப்போமென்று அறிந்திருக்கிறோம்.

தேவபிள்ளைகளாகிய நாம் இவ்வுலகில் வாழும்போது, ஆண்டவரை அவரது அழகு, இனிமை, குணாதிசயம் போன்ற எல்லாவற்றிலும் அறியும்போது அவரது சிந்தை நமக்கு ஒத்ததாகிவிடு கிறது. இந்த அறிவு தேவ ஆவியானவர் மூலம் நமக்கு அருளப்படுகிறதும் விலை யேறப்பெற்றதுமாகும்.

நமது ஆத்தும மீட்புக்காக அவரைப் போதுமான அளவில் அறிந்து கொண்டோமானால் கர்த்தருக்கு ஸ்தோத்திரம். ஆனால் அதுமட்டும் போதாது, அவரது நாமம் மகிமைப் படுவதும், அவருடைய சிந்தையோடு இவ்வுலகில் வாழ்வதும் முக்கியம்.

அதிக அளவிலான ஆவிக்குரிய வல்லமை

"இளைப்படைந்தவனுக்கு சமயத்திற்கேற்ற வார்த்தை சொல்ல நான் அறியும்படிக்கு, கர்த்தராகிய ஆண்டவர் எனக்குக் கல்விமானின் நாவைத் தந்த ருளினார்" ஏசா.50:4.

ஆண்டவராகிய இயேசு நமது நெருங்கிய நண்பர் என்ற முறையில் சோர்ந்துபோகும்போது 'என் அன்பின் ஆண்டவரே, ஏற்ற வேளையில் ஏற்ற வார்த்தையைத் தாரும்' என்று கேட்க வேண்டும். கண்ணீரின் பள்ளத்தாக்கைக் கடந்துபோகும் வேளையிலும் கூட அல்லது வேதனையான நேரங்களிலும், கடின உழைப்பு, துக்கம், சோதனை, பிரச்சனை போன்றவைகளின் மத்தி யிலும் கர்த்தருடைய வழியில் நடக்க விரும்புகிற ஒருவர் ஆவிக்குரிய களைப் படைவது இயல்பு. அப்போது ஆண்ட வரிடம் சென்று ஆண்டவரே நான் சோர்ந்து போனேன். உமது வார்த் தையை இவ்வேளைக்கேற்றபடி பேசு வீராக என்று ஜெபிக்க வேண்டும்.

இப்படி ஜெபிக்கும் பழக்கம் உங்களுக்கு உண்டா? என் ஆண்டவரை 50 ஆண்டுகளாக அறிந்து சேவித்து வரும் நான் இதனைப் பழக்கமாகக் கொண்டி ருப்பதால் உங்களையும் அவ்வாறாக ஜெபிக்க கேட்டுக் கொள்ளுகிறேன்.

இதனால் கிடைக்கும் பலன், நான் என் தேவனுக்கு மகிமையான சாட்சியாக வாழ்வது மட்டுமே. நான் சோர்ந்து போன வேளைகளிலெல்லாம் அவர் என்னோடு பேசியிருக்கிறார். எனவே நீங்களும் சோர்ந்துபோகும் போதெல்லாம் இவ்வாறு ஜெபியுங்கள். அவர் இவ்வாறு உங்களோடு பேச அவரை தூண்டுங்கள். இது நமது இருதயங்களில் பத்திரப்படுத்தப்பட்டு, சோதித்து அறியப்பட வேண்டியது.

எல்லாச் சூழலிலும் நம்மோடு பேசி, நமது சோர்வை அகற்றும் ஒரு நண்பர் நமக்கு ஆயத்தமாயிருக்கிறார். இதை அறிந்து கொள்ளாதவர்கள் அவரை ஒரு நெருங்கிய நண்பராக்கிக் கொள்ளும் படி உங்களை அன்புடன் வேண்டு கிறேன்.

எல்லா காலங்களிலும் கர்த்தரை நம்ப வேண்டும்

"உமது நாமத்தை அறிந்தவர்கள் உம்மை நம்பியிருப்பார்கள்" சங்.9:10. எனவே அவரை நம்புகிறவர்கள் முழுவது மாகத் தங்களை அவருக்கு ஒப்படைத்து அவரது வல்லமை, அன்பு, ஞானம் எல்லா வற்றிலும் எல்லாச் சூழலிலும் சார்ந்திருப் பார்கள். இது எவ்வளவு ஆசீர்வாத இருதயத்தின் நிலை!

உலகம் நமது மார்க்கத்திலும் நமது விசுவாசப் பிரமாணத்திலும் மட்டும்தான் வேறுபாடுடையவர்களா என்று பார்க் கிறது. தேவ காரியங்களில் நாம் எவ்வாறு உண்மையுள்ளவர்கள் என்று அறிய அவர்கள் விரும்புகிறார்கள். எனவே நாம் எல்லாக் காலத்திலும், எல்லா சூழலிலும் சமாதானமாயிருப்பதைக் கண்டு நமக்கு எப்போதும் உதவிசெய்து ஆசீர்வதிக்கிற ஒருவர் இருக்கிறார், அவர் ஒரு நெருங் கிய நண்பர், அதனால் அவர் என்னைக் கொன்று போட்டாலும் அவர் மேல் நம்பிக்கையாயிருப்பேன் யோபு.13:15 என்று சொல்ல முடிகிறது என்பதைக் கண்டு தேவனுடைய உண்மைத்து வத்தை அறிந்து கொள்வார்கள்.

மகிமையான ஒரு தோழமை

நாம் பிதாவோடும், குமாரனாகிய கிறிஸ்துவோடும் தோழமையுடைய வர்கள். அதாவது நாம் பிதாவோடும் குமாரனாகிய கிறிஸ்துவோடும் தோழமை யுடையவர்கள் அல்லது நாம் பிதா வோடும் குமாரனோடும் பங்காளிகள்.

நமது பங்காளியைக் குறித்து நாம் அறிய ஆசைப்படுவோமல்லவா? அவரது ஐசுவரியம், அவரது ஆதாரம், அவரது மனநிலை, திறமை ஆகியவற்றை அறிந்து அதற்கேற்ப அவரோடு நெருங்க முயற்சிப்போமே. தேவன் நமது கிருபை யின் ஐசுவரியத்தாலே நம்மை பங்கு தாரர்களாக்கி, அவரோடும் குமார னோடும் நெருங்கிய உறவு ஏற்படுத்திக் கொள்ள விரும்புகிறார்.

தகுதியற்ற நம்மை அவர் தம் மோடு நெருங்கிய உறவுக்காக அழைக் கிறார். ஆனால் பலவீனரான நாம் இருளின் ஆதிக்கத்தில் அகப்பட்டு, கண்ணீரின் பள்ளத்தாக்காகிய இவ்வு லகில் கடந்து செல்லும்போது பயமின்றி அவரிடம் கிட்டிச்சேருவது எத்தனை நன்மையானது! நமது இரக்கமும் உருக்கமும் நிறைந்த பங்காளியாகிய இயேசுக் கிறிஸ்து ஐசுவரியமும் ஞானமும் நிறைந்தவரும், நித்தியமாக மாறாத அன்பை நம்மிடம் விளங்கப் பண்ணுகிறவருமாயிருக்கிறார்.

கிறிஸ்துவில் தரிப்பிக்கப்பட்ட ஒரு குடும்பம்

A family clothed in Christ

Kim Butts

வேதபகுதி : எபேசி.6:11-13

நாம் முழுமையாக தேவனு டைய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக் கொள்ள வேண்டும் என்பதை வேத வாக்கியங்கள் தெளிவுபடுத்துகின்றன. மேற்கூறிய வேதபகுதியில் அது இரு முறை கட்டளையிடப்படுகிறது. ஏன் நாம் ஆவிக்குரிய சர்வாயுதவர்க்கத்தை அணியும்படி தேவன் விரும்புகிறார்? இக்கொடிய நாட்களில் சாத்தானுடைய சதித்திட்டங்களை எதிர்த்து உறுதியாக நிற்கவே.

பாதுகாவலான கவசம் மிகவும் முக்கியமானது. நாம் நமது உயிர்களுக் காகவும், நமது பிள்ளைகள் மற்றும் வழி தவறிய அருமையானவர்களுக்காகவும் ஒரு போரில் ஈடுபட்டிருக்கிறோம் என்பதை எண்ணாவிடில் அழிவையும் தோல்வியையும் சந்திக்க நேரிடலாம். சோதனைகள் வரும் போதும், பாடுகள் வரும்போதும், நாம் உறுதியோடும் தகுந்த பாதுகாப்போடும் எதிர்த்து நிற்க முடியுமா? இன்று கிறிஸ்தவ குடும்பங் கள் தாக்குதலுக்குள்ளாயிருக்கின்றன. எனவே அனுதினமும் சர்வாயுதவர்க்கத் தைத் தரித்திருக்க வேண்டும். எப்பக்கத்தி லிருந்து தாக்குதல் வரும் என்பதை நாம் அறியோம்.

இதை அணிந்து கொள்வது எப்படி? இது ஜெபத்தோடு செய்யப்பட வேண்டியது. ஒவ்வொரு நாளும் குடும்ப அங்கத்தினர் காலையில் தங்கள் கடமை களுக்காகப் பிரிந்து செல்வதற்கு முன்

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்க தொடர்ச்சி)

பாகக்கூடி ஜெபிக்க வேண்டும். கருத்தோடு ஒருவருக்காக ஒருவர் ஜெபித்து விட்டுத்தான் வாழ்வாகிய போராட்டத்திற்குள்ளே இறங்க வேண்டும்.

கிறிஸ்துவினாலே உங்களைத் தரிப்பித்துக் கொள்ளுங்கள்

அதிக விரைவும் சுறுசுறுப்புமான இன்றைய கலாச்சாரத்தில் குடும்பமாக ஜெபிக்க ஒரு சமயத்தைக் கண்டு பிடிப்பது கடினமாயிருக்கிறது. தமது பிள்ளைகளாகிய நமது வாழ்வில் தேவனுக்கு ஒரு திட்டமுண்டு. அது போலவே சாத்தானும் ஒரு திட்டம் வைத்திருக்கிறான். எனவே பவுல் சொல்லுவது போல "துர் இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணாமல் இருந்து இயேசுக் கிறிஸ்துவைத் தரித்துக் கொள்ளுங்கள்" ரோமர் 13:14. இயேசு நமது ஆண்டவரும் இரட்சகருமாக ஏற்றுக் கொள்ளப்படும்போது, கிறிஸ்தவர்கள் வெளிப்படையாக வித்தியாசமாகக் காணப்படுவார்கள். நமது வாழ்வு ஒவ்வொரு விதத்திலும் இயேசுவை குடும்பத்திற்கும், நண்பர்களுக்கும் சுற்றிலும் வாழ்பவர்களுக்கும் காண்பிக்க வேண்டும். நமது பாவதன்மை மேல் மட்டத்திற்கருகில் நுழைய பிரயாசப்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே கிறிஸ்துவால் நாம் தரிப்பிக்கப்பட்டு அதிகமதிகமாக அவர் சாயலைப் பெறுவோம்.

தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை தரித்துக்கொள்ள நான் உணர்த்தப்பட்ட போது தேவன் கிறிஸ்துவையும் என்மீது போர்த்திக் கொள்ள அனுமதித்தார். அது எனக்கு கிளர்ச்சியை ஏற்படுத்தியது. எடுத்துக் காட்டாக சத்தியம் என்னும் இடைக் கச்சையை நான் தரித்த போது (எபே.6:14) இயேசுவையும் தரித்துக் கொள்கிறேன். ஏனெனில் அவர் சத்தியராயிருக்கிறார். நீதி என்னும் மார்க் கவசத்தை நான் அணிந்து கொள்ளும் போது இயேசுவையே நான் தரித்துக் கொள்ளுகிறேன். ஏனெனில் அவர் நீதியாயிருக்கிறார். இதுபோலவே சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையாகவும் இரட்சண்ய மென்னும் தலைச் சீராவாகவுமிருக்கிறார்.

பழைய மனிதனுடைய பலத்தோடு மனிதன் இந்த ஜெப மண்டலத்துக்குள் பிரவேசிக்க முயற்சிப்பதால்ஜெபத்தை திருப்தியற்றதாகவும், ஜெப வாழ்வை கவர்ச்சியற்றதாகவும் காண்கிறான்.

விசுவாசம் என்னும் கேடயம் மற்றும் தேவ வசனமாகிய ஆவியின் பட்டயம்

எபே.6:16-ன்படி பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப் போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாச மென்னும் கேடயத்தைப் பிடித்துக் கொண்டவர்களாயும் நில்லுங்கள். விசுவாசத்தின் மூலமாகவே நாம் கிறிஸ்துவைத் தரித்துக் கொள்கிறோம். அவரது வல்லமை, நம்மிலும் நம் மூலமாகவும் செயல்படுவதால் நமது உள்ளான தீர்மானத்தை வெளிப்பிரகாரமாக வெளிப்படுத்தி இயேசுவைப் பின்பற்றச் செய்கிறது.

மேலே கூறப்பட்ட ஆயுதங்கள் நம்மைப் பாதுகாக்கக் கூடியவை. இவை இன்றியமையாதவைகளே. இவற்றோடு தாக்கும் ஆயுதங்களும் போரிட பயன் படுகின்றன. எபே.6:17-ல் 'தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தை எடுத்துக் கொண்டு' எனப்படிக்கிறோம். யோவா.1:1-ல் 'ஆதியிலே வார்த்தையிருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அது தேவனாயிருந்தது' என வாசிக்கிறோம். பிசாசினால் சோதிக்கப்பட்ட இயேசு, வேதவசனங்கள் மூலம் அவனிடம் போரிட்டு, அவனை மேற்கொண்டது போல நாமும் மேற்கொள்ளுவோம்.

பழைய மனிதன் மாம்சத்துக்குரியவைகளல்லாத வல்லமையான தேவ ஆயுதங்களைத் தரிக்கவில்லை.

ஜெபத்தின் வழியாகத் தரிப்பிக்கப்படுவோம்

குடும்பங்களே! தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தால் பாதுகாக்கப் படுகிறீர்களா? ஜெபத்தின் மூலமாகவே இது நடைபெறும். "ஆண்டவரே, சாத்தானை எதிர்கொள்ள நீர் பயன் படுத்திய சர்வாயுத வர்க்கத்தை நாங்கள் பயன்படுத்த வேண்டும். இரட்சிப்பாகிய தலைச்சீராவையும் நீதி என்னும் மார்க் கவசத்தையும் அணிந்து கொண்டு சத்தியம் என்னும் இடைக் கச்சையை இடுப்பில் கட்டிக் கொள்ளட்டும். இந்த சத்தியத்தைப் பிறரோடு பகிர்ந்து கொள்ள ஆயத்தம் என்னும் பாதரட்சையை நாங்கள் அணியட்டும். எதிரியின் அம்புகளிலிருந்து முழுவதுமாகப் பாதுகாக்கப்பட விசுவாசமென்னும் கேடயத்தைப் பிடித்துக் கொள்கிறோம். உமது வசனமாகிய பட்டயத்தைக் கைகளில் எடுத்துக் கொள்வதால், யாருக்கும் பதில் சொல்லக்கூடியவர்களாக நாங்கள் இருக்கட்டும் 1 பேது.3:15. முக்கியமாக பிறர் எங்களைப் பார்க்கும் போது, ஆண்டவராகிய இயேசுவைப் போல நாங்கள் தரிப்பிக்கப்பட்டிருப்பதைக் காண வேண்டும்."

ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!

எழுப்புதலுக்காக இதய கதறல்

(7 மணி நேர உபவாச ஜெபம்)

இடம் : **Shekinah Full Gospel Mission**
Mamry Garden, Jesus Nagar
Pasuvandanai - 627 718. Tuticorin District.

நாள் : ***23.04.2022,*** *4-வது சனிக்கிழமை*

நேரம் : காலை 10.00 மணி முதல்
மாலை 05.00 மணி வரை

செய்தி : சகோதரன் **வெஸ்லி தேவதாசன்**

ஜெபம் : **NIMS மிஷனெரிகள்,** குஜராத்
IEM மிஷனெரிகள், தமிழ்நாடு

தொடர்பு : **வருகையின் தூதன்** *மொபைல் : 9543221008*

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு

பழைய மனிதனுடைய பலத்தோடு மனிதன் இந்த **ஜெப** மண்டலத்துக்குள் பிரவேசிக்க முயற்சிப்பதால் ஜெபத்தை திருப்தியற்றதாகவும், **ஜெப** வாழ்வை கவர்ச்சியற்றதாகவும் காண்கிறான்.

உண்மையான **ஜெபம்** நம்மில் உருவாக நாம் கிறிஸ்துவுடனே சிலுவையில் அறையப்பட வேண்டும். இதுவே முதன்மையானதும், முக்கியமானதுமான நிபந்தனை.

நாம் கிறிஸ்துவோடு மரணத்திலும் உயிர்த்தெழுதலிலும் ஒன்றிணைக்கப் பட்டிருப்பதை உணரும் போது மட்டுமே **ஜெபம்** ஒரு மிகப்பெரிய விசை எனக் காண இயலும்.

பகிரங்கமான **ஜெபம்** பிறரில் தாக்கத்தை ஏற்படுத்தலாம், ஆனால் அது தேவனை செயல்படுத்தச் செய்ய முடியாது.

ஜெபம் என்பது ஏழைகளின் மொழி என்றும் சொல்லப்படலாம்.

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason